என்ற ஒரு குறிப்பைத் தந்தார்கள். அது அன்றைய பத்திரிகையிலே வந்திருக்கிறது. பத்திரிகையிலே வந்திருப்பதோடு மட்டுமல்லாமல், இதிலே என்னென்ன காரணங்களுக்காக என்று சொல்லப்படுகிறதோ அவற்றில் பெரும்பாலானவை அதில் இடம் பெற்றிருக்கின்றன. அந்தச் செய்தித் தாள்கள், இதற்கு சபாநாயகர் அனுமதி பெற வேண்டும், அனுமதி பெறுவதற்கு இத்தனை பேர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற விதிமுறைகளையெல்லாம் குறிப்பிட்டிருக்கின்றன. அவ்வாறு குறிப்பிட்டிருக்கும் செய்தித் தாள்களுக்கு, அந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்து அதன் பிறகு தான் வெளியிட வேண்டும் என்றும் தெரிந்திருக்க வேண்டும். எனவே, பத்திரிகைகள் தவறு என்று நாம் நினைக்க முடியவில்லை. பத்திரிகைகளுக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் செய்தி கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் சொன்னார்கள் என்று கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இந்த மன்றத்திலே கொண்டு வந்து அனுமதி பெறுவதற்கு முன்பு பத்திரிகைகளுக்குச் செய்தியைக் கொடுப்பது என்பது மன்றத்தின் உரிமையைப் பாதிக்காதா என்று கேட்கிறார்கள்.

இது உரிமைப் பிரச்சினையாகக் கருதப்படவேண்டும் என்பது முறையல்ல. இருக்கிற மரபை பாதிக்கிறது என்று தான் நான் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, ஒரு குறுகிய கால கேள்வி கொடுத்து, அந்தத் தீர்மானமும் கேள்வியும் அனுமதிக்கப்பட்டு அவற்றிற்குரிய விடைகள் அளிப்பதற்கு முன்பே பத்திரிகையிலே வருமானால் அது மரபை மீறிய செயலாகும் என்று லோக் சபாவிலே கூட இப்படிப்பட்ட தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒரு அளவிற்கு இது மரபைமீறிய செயல்தான். ஆனாலும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நான் கொடுக்கவில்லை, பத்திரிகையிலே வந்த செய்தியை நான் பார்க்க வில்லை, பத்திரிக்கையிலே வந்ததற்கு நான் பொறுப்பாளி அல்ல என்று கூறிய காரணத்தாலே அவருடைய சொல்லுக்கு மதிப்பளித்து இப்படிப்பட்ட மரபுகள் இனி நல்ல முறையிலே கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று கூறி, இத்துடன் இதை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ii) அவையுரிமைக் கேள்விகள் எழுப்ப வேண்டிய நேரம்.

DR. H. V. HANDE: With regard to the point of order I raised, the Deputy Speaker promised to give a clear-cut ruling as to the exact stage at which a privilege motion could be raised.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அன்றே அந்த பாயின்ட் ஆஃப் ஆர்டருக்குப் பதில் அளித்திருக்கிறேன். இந்த மன்றத்திலே எப்படிப்பட்ட மரபுகள் இருக்கின்றன என்று கூறி இருக்கிறேன். அதன் மீது வேறு விதமான ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்ப வேண்டியதில்லை. வேண்டுமானால் ரூல்ஸ் கமிட்டி தீர்மானித்து திருத்தம் செய்து கொள்ளலாம்.

திரு. க. ர. நல்லசிவன்: பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், சார். இன்னும் இரண்டு நாட்களுக்குச் சட்டசபை இருக்கிறது. இந்த இரண்டு நாளிலே நேரடியாக உரிமைத் தீர்மானங்கள் போன்ற பல இருக்கின்றன. அமைச்சர்கள் நாளை, நாளை மறுதினமாவது வருவார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு வராத அமைச்சர்கள் நாளைக்காவது வந்தால் அவர்கள் மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரிமைப் பிரச்னைகள் வந்து, நம்முடைய மன்றத்திலே பல தொடர் கூட்டங்களிலே முடிவுக்கு வராமல் அந்தக் கூட்டம் கவர்னராலே கலைக்கப்படுகின்ற காலத்திலே காலாவதி

யாகிய நிகழ்ச்சிகள் கூட இருக்கின்றன. உரிமைப் பிரச்னைகளை எப்பொழுது எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு சபாநாயகர் தான் காலம் குறிப்பிட வேண்டும். அந்தக் காலத்திலேதான் எடுத்துக்கொள்ள முடியும். ''அது ஓர் உரிமைப் பிரச்னை, அதை ஏற்றுக் கொள்ளலாமா?'' என்றெல்லாம் கேட்பதற்கு இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பால சுப்பிரமணியன் அவர்கள் கொடுத்திருக்கின்ற உரிமைப் பிரச்னையைப் பொறுத்தவரை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைக் கலந்து அதற்கு நான்அளிக்கிறேன். அதையும் இன்றே எடுத்துக் கொள்ளலாம் என்று இருந்தேன். அமைச்சர் வராத காரணத்தாலே இன்றையதினம் எடுத்துக் கொள்ளவில்லை.

டாக்டர் எஸ். வி. ஹாண்டே : ஒரு விளக்கம். திட்டவட்டமாக உரிமைப் பிரச்னையை எப்பொழுது கிளப்பலாம் என்று நீங்கள் இங்கே ஒரு அறிவிப்புத் தந்தால் அது நமக்கு, அடுத்தபடியாக புது உரிமைப் பிரச்னை கொண்டுவர வேண்டுமென்று விரும்பினால் சௌகரியமாக இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வது புரிகிறது. சபாநாயகர் இப்பொழுது செய்யக் கூடியதெல்லாம் நம்முடைய கையிலே இருக்கிற சட்டமன்ற விதிமுறைகள் என்ன கூறுகின்றனவோ, நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடந்திருக்கின்றனவோ, அதை ஒட்டித்தான் ஆகவே, இப்பொழுது இருக்கின்ற சட்டமன்ற விதிமுறைகளும் சட்டமன்ற நிகழ்ச்சிகளினுடைய முன் நிகழ்ச்சிகளும் இப்பொழுது நான் கூறிய முறையைத்தான் கூறுகின்றன. ஆகவே, அதற்கு மாறாக வேறு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் கள் ஒரு தீர்மானம் கொடுத்து நிறைவேற்றிக் கொள்ளலாம். அதை ரூல்ஸ் கமிட்டி பரிசீலிக்கும் என்று நான் கூறியிருக்கிறேன். அதை மீண்டும் மீண்டும் இந்த மன்றத்திலே எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு மசோதா, மாண்புமிகு இராமமூர்த்தி அவர்கள்.

4. தனி உறுப்பினர் அலுவல்

(i) மசோதா

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா

THIRU K. RAMAMURTHY : Sir, I move for leave to introduce the Madras State Marriages Registration Bill, 1968.

THIRU N. S. V. CHITHAN : I second the motion.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THIRU K. RAMAMURTHY : I have pleasure to introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் துணைப் தலைவர் : மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

இப்பொழுது திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறார்.

5. தன்னிலை விளக்கம்.

திரு பழனிவேல் ராஜன் ஆற்றிய உரையில் திருத்தம்.

THIRU PALANIVEL RAJAN : Sir, while speaking on the no-confidence motion yesterday, I said that according to Mr. K. T. Kosalram the Congress Party had spent seventy-five lakhs of